


**09. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் மக்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2. நாடுமுழுவதும் இல்லந்தோறும் தேசிய கொடி ஹர் கர் திரங்கா இயக்கம் இன்று தொடங்கியது.

3. சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிதாக நியமிக்கப் பட்டுள்ள 15 நீதிபதிகள் இன்று பதவியேற்றனர்.

4. தமிழக திருக்கோவில் குளங்களை சீரமைப்பது உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகள் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் வெளியிடப்படும் என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

5. இருபது வயதிற்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்பட்ட போட்டியில் இந்தியா இன்று மூன்று பதங்கங்களை கைப்பற்றியது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு அறிமுகப்படுத்திய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் மக்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் குடியரசு தலைவரின் காவலர் வண்ண விருதுகளை இன்று வழங்கி பேசியஅவர், தொழில்நுட்பம் சார்ந்த விரைவான நீதியை வழங்க இந்த சட்டங்கள் வழிகோலுவதாக கூறினார்.

காலத்திற்கு பொருந்தாத ஆதிக்க சட்டங்களை களைய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த அமைச்சர், புதிய குற்றவியல் சட்டங்களின் மூலம் பொதுமக்களுக்கான நீதி உறுதிசெய்யப் படுவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக புதுச்சேரி கோரிமேடு காவல் பயிற்சி பள்ளியில் இவ்விருதை வழங்கி காவலர்களின் அணிவகுப்பு மரியாதையும் ஏற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹர் கர் திரங்கா

நாடுமுழுவதும் இல்லந்தோறும் தேசிய கொடி ஹர் கர் திரங்கா இயக்கம் இன்று தொடங்கியது.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் அந்தமான் ஸ்ரீவிஜயபுரத்திலும்,

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா புதுச்சேரியிலும் ஹர் கர் திரங்கா இயக்கத்தை இன்று தொடங்கி வைத்தார்.

வரும் 15-ம் தேதி நாட்டின் 80-வது சுதந்திர தினம் கொண்டாடப்படும் நிலையில் தேசபக்தி, ஒற்றுமை, கலாச்சார பாரம்பரியத்தை நிலைநாட்டும் வகையில் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் தேசிய கொடியை ஏற்றுமாறு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள 200-க்கும் மேற்பட்ட இந்திய தூதரங்களிலும் ஹர் கர் திரங்கா இயக்கத்தை ஒட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - வெள்ளையனே வெளியேறு இயக்கம்

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 84-வது ஆண்டு நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் இந்த இயக்கத்தில் பங்கேற்ற சுதந்திர போராட்ட வீர்களின் துணிச்சல், தியாகம், தேசப்பற்று ஆகியவை இளம் தலைமுறையினருக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்து வருவதாக கூறினார்.

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என்ற முழக்கத்தால் ஈர்க்கப்பட்டு, சுதந்திர போராட்டத்தில் அவர்கள் தேசத்தை ஒன்றிணைத்ததாக தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய சுதந்திர போராட்டத்திற்கு வித்திட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றவர்களின் தியாகத்தை நாடு என்றென்றும் நினைவுகூர்வதாக கூறியுள்ளார்.

காலனி ஆதிக்கத்திற்கு எதிராக துணிச்சலுடன் போராடி உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

அமெரிக்காவுடன் வர்த்தகம் பாதுகாப்பு சவாலான தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிப் பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் உடன் தொலைபேசியில் ஆலோசனை மேற்கொண்ட பிரதமர், பிராந்திய மற்றும் சர்வதேச வளர்ச்சி பரஸ்பர நல்லிணக்கம் குறித்து இருவரும் விவாதித்ததாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நீதிபதிகள் நியமனம்

சென்னை உயர்நீதிமன்றத்திற்கு புதிதாக நியமிக்கப் பட்டுள்ள 15 நீதிபதிகள் இன்று பதவியேற்றனர்.

தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இதன்மூலம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை தற்போது 51 ஆக அதிகரித்துள்ளது.

இந்த பதவியேற்பு விழாவில் சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

தமிழகத்தில் இந்துசமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில் நிலங்கள் சட்ட விரோதமாக பதிவு செய்யப்பட்டதாக பெறப்படும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சி ஸ்ரீரங்கத்தில் புனரமைக்கப்பட்ட கிழக்கு கோபுர வாசலை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்து பேசியஅவர், தமிழக திருக்கோவிகளின் திருப்பணிகள், கோவில்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி, குளங்களை சீரமைப்பது தொடர்பான முக்கிய அறிவிப்புகள் நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் வெளியிடப்படும் என்றார்.

ஸ்ரீரங்கம் அடிமனை விவகாரத்தில் சட்ட வல்லுநர்களின் ஆலோசனை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே வரும் ஒன்றாம் தேதிமுதல் திருக்கோவில்களில் செல்போன் கொண்டுசெல்ல தடை விதிக்கப் படுவதாக அமைச்சர் தெளிவுப்படுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நிர்மல் குமார்

தொகுதி மறு சீரமைப்பு மசோதாவை அனைவரும் ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மாநில மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் மதுரை தூய்மை மாரத்தான் நிகழ்ச்சியை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், மக்கள் தொகை அடிப்படையில் தமிழகத்திற்கான மக்களவை தொகுதிகள் குறைய வாய்புள்ளதாக அச்சம் எழுந்துள்ள நிலையில் 39 தொகுதிகளை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மதன்ராஜா

அரசு பேருந்து சேவைகளை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மாநில சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. மதன்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் பேருந்து நிலையத்திலிருந்து தவசலிங்கபுரம், கந்தசாமிபுரம் வரை செல்லும் புதிய பேருந்து சேவையை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், இதன்மூலம் மாணவர்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கலந்தாய்வு

MBBS BDS படிப்புகளுக்கான தரவரிசை பட்டியல் நாளை வெளியிடப்படும் என மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 72 ஆயிரத்து 627 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில் இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு வரும் 13-ம் தேதி தொடங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

லோகேஷ் தமிழ்செல்வன்

நாமகல்லில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு மாராத்தான் போட்டியை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்செல்வன் இன்று தொடங்கி வைத்தார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்த ஒட்டத்தில் போதைப் பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கே.வி. தங்கபாலு

காவிரி விவகாரத்தில் தமிழக அரசு தனது கடமையை செய்து வருவதாக காங்கிரஸ் கட்சியின் திரு. கே.வி. தங்கபாலு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 82-வது பிறந்த நாளை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூரில் 35-வது ஜோதி யாத்திரையை தொடங்கிவைத்த அவர் இவ்வாறு கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

குடற்புழு நீக்க முகாம்

தமிழகத்தில் தேசிய குடற்புழு நீக்க சிறப்பு முகாம் நாளை தொடங்குகிறது.

மாநிலத்தில் 1 முதல் 19 வயது வரையிலான, 2 கோடியே 6 லட்சம் குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர், உட்பட 50 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருவாரூர் மாவட்டத்தில் குழந்தை திருமணங்களில் ஈடுபடுவோர் மீது சிறை உள்ளிட்ட கடும் தண்டனை விதிக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு. மோகனச்சந்திரன் எச்சரித்துள்ளார்.

கும்பகோணம் மகாமக பெருவிழா வரும் 2028-ம் ஆண்டு மார்ச் 9-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் தமிழ்நாடு பாரம்பரிய குழுவினர் ஆய்வுப்பணிகளை தொடங்கியுள்ளனர்.

மத்திய தொல்லியல் துறை, இந்து சமய அறநிலையத்துறை, ஊரக வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த 14 பேர் கொண்ட குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தென்காசி மாவட்டம் புலியங்குடி அருகே சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட ஆயிரத்து 680 கிலோ ரேஷன்அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடித்திருவாதிரை விழா அரியலூர் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலய வளாகத்தில் நாளை நடைபெறுகிறது.

நீலகிரி கூடலூர் அருகே தனியார் காப்பி தோட்டத்தில் புலி தாக்கி முதியவர் உயிரிழந்த நிலையில் வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோல் ஈரோடு மாவட்டம் தாளவாடி மலைப்பகுதியில் காமயன்புரத்தில் காட்டுயானை தாக்கி விவசாயி உயிரிழந்தது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 3 மாதங்களில் மட்டும் யானை தாக்கி இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளதால் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கபினி அணை

கபினி அணையிலிருந்து காவிரிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

அணை முழு கொள்ளவை எட்டும் தருவாயில் உள்ளதால் உபரிநீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது.

இதனிடையே மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு இன்றுகாலை 8 மணி நிலவரப்படி 5 ஆயிரத்து 500 அடியாக குறைந்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 78.3 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

குற்றாலம்

குற்றால அருவிகளில் வாரவிடுமுறையை ஒட்டி இன்றுகாலை முதலே சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

நெல்லை வாய்ஸ்

நெல்லை மாவட்டம் சொரிமுத்து அய்யனார் திருக்கோவிலுக்கு ஆடி அமாவாசையை ஒட்டி பக்தர்கள் பூஜைப் பொருட்கள் கொண்டுசெல்ல இன்று ஒருநாள் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோவில் ஆடிப்பூர திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான 5 கருட சேவை இன்றிரவு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தடகளம்

அமெரிக்காவில் 20 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்பட்ட போட்டியில் இந்தியா இன்று மூன்று பதங்கங்களை கைப்பற்றியது.

உயரம் தாண்டுதலில் வசந்த்குமார் மெஹ்வால் வெள்ளி பதக்கத்தையும்,

நீளம் தாண்டுதலில் ஷாநவாஸ் கான் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர்.

ஈட்டி எறிதல் போட்டியில் ஆசிஷ் யாதவ் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் மகளிர் ஒற்றையர் சாம்பியன்பட்டத்தை இந்தியாவின் அஷ்மிதா சாலிஹா கைப்பற்றியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

கனடாவில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூக்கிபாம்ப்ரி, நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை – பிரான்ஸ் இணையை இன்று இரவு எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖